RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2412

# அத்வைத வேதாந்தம் குறிப்பிடும் இறுதி இலக்கு - ஓர் மெய்யியல் ஆய்வு

இ. சகாயசீலன் [அ,*]

[அ] ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

# Final Goal in Advaita Vethanda is a Philosophical Research

R. Sahayaseelan [a,*]

[a] Department of Comparative Religion and Social Harmony, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
*Corresponding author Email: sahayaseelanr@esn.ac.lk
DOI: https://doi.org/10.54392/ijot2412
Received: 22-12-2023; Revised: 30-01-2024; Accepted: 04-02-2024; Published: 13-02-2024

**Abstract:** Religion has secured a significant place in world traditional Civilization. Influence of religion has been well synthesized in art, Literature, Ethics and philosophy. Generally speaking religion always discusses three important entities such as, Human life, World and God. Faith in God, Philosophical thoughts and moral principles are the core topics in religion. In this respect it could be said that religion is being played a pivotal role since from birth up to death of human beings. In this respect, Advaita Vedanta as one of the Hindu Philosophies has been discussed about the Final Goal of Human Life and this paper aim at dsiscusssing the said concept. Though there are distinct philosophical schools in Hinduism, considerable number of Scholars have been paid there attention on Advaita Vedanta and thus this topic is apt for discussion. This paper further discuss the basic entities which Advaita Vedanta firmly believed as final Goal of human Life and the ways and means to achieve that status. Since there are several origin texts and interpretations available about Advaita Vedanta this study also mainly based on those resources and historical analysis is also being performed in this paper. Advaita Vedanta accepts the principles of Karma and re-birth and emphasize that birth occurs due to karma and this process is endless and miserable. Thus, the final goal of human being is to detach from birth and thereby to get rid from suffering. As has been already stated the main aim of this paper is to identify the final goal of Advaita Vedanta and then to illustrate them clearly.

**Keywords:** Advita Vethanda, Human life, Suffering, Mukthi

## முன்னுரை

"வேதாந்தம்" என்பதற்கு "வேதத்தின் இறுதி" (வேத + அந்தம்) எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. ஆங்கிலச் சொல்லான (End) என்பதைப்போல் 'அந்தம்' எனும் சொல்லானது இறுதியையும், இலட்சியத்தையும் குறிக்கும். உபநிடதங்களை வேதாந்தம் என வழங்குவதற்குக் காரணம், அவை பெரும்பாலும் வேதத்தினுடைய கடைசிப்பகுதியாய் அமைந்திருப்பதும், வேதத்தினுடைய சாராம்சம் அங்கே காணக்கிடப்பதுமேயாகும். உபநிடதங்களுக்கு விளக்கவுரையாகவே பாதராயனரின் பிரம்மசூத்திரம் காணப்படுகின்றது. இதற்கு வேதாந்த சூத்திரம் என்றும் ஒரு பெயருண்டு.

வேதாந்தம் எனத் தனியே சுட்டும்போது அது சங்கரருடைய அத்வைதத்தையே சிறப்பாகக் குறிப்பதாக உள்ளது. ஏனையவை அவற்றின் மூலவர்கள் பெயருடன் இணைந்து முறையே, இராமானுஜ வேதாந்தம், மத்துவர் வேதாந்தம் என அழைக்கப்படுகின்றன. பிற்பட்டகாலங்களில் வேதாந்த தத்துவ வளர்ச்சிக்கு நிம்பாக்கர், வல்லவர், சைதன்யர், போன்றோரும் தமது பங்களிப்புக்களைச் செய்துள்ளனர்.

கி.பி 788ம் ஆண்டு மலபாரில் (கேரளா) ஒரு பிராமணக் குடும்பத்தில் சங்கரர் பிறந்தார். தாயார் பெயர் ஆரியாம்பிகை. தந்தையார் சிவகுரு என அறியமுடிகின்றது. சங்கரர் வாழ்ந்த காலத்தில் பௌத்தர்கள், பிராமணர்கள், ஜைனர்கள் அனைவருமே அதிகபட்சமானவர்களைச் சந்நியாசிகளாக மாற்றுவதற்குப் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். எட்டு வயதுள்ள சிறுவனான சங்கரரைக் கோவிந்தர் என்பவர் சீடனாக்கிக் கொண்டார். முப்பத்திரண்டு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த, குறைந்த வயதில் வேதாந்தத்தின் மீதும், பத்து முக்கிய உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை போன்றவற்றிற்கு உரை எழுதியமையானது அவரது உயர்ந்த அறிவுக்குச் சிறந்த சான்றாகும் (Ragul Sangiruthiyaayan, 1985).

அதிக நுண்மையானதும், அதிக தர்க்கத்தன்மை கொண்டதுமான தத்துவமாகும். மிகவும் அறிவார்ந்த, கடினமான தத்துவமாகக் காணப்படும் அதேவேளை இறையியல் தன்மையிலிருந்து முழுமையாக விடுதலை பெற்ற தூய்மையான மெய்யியலாகவும் இத்தத்துவம் காணப்படுகின்றது. வுhiஎயரவ என்பவர் கூறுகையில், "சங்கரருடைய தத்துவமானது முழுமையான மெய்யியல் சார்ந்ததாகவும், இறையியலிலிருந்து விடுபட்டதாகவும், இந்தியாவில் தோன்றிய முக்கியமான ஆர்வத்தைத் தூண்டக்கூடிய தத்துவமாகவும், ஏற்கனவே உள்ள வேதாந்தத்திலிருந்து மாறுபடாத ஒன்றாகவும், ஏனைய வேதாந்தங்களைவிட ஆழமானதும், நுண்மையானதுமான சிந்தனைத் தொகுதியாகும்" எனக் கூறியிருக்கின்றார் (Radhakirishnan, 1940).

சங்கரர் தன்னுடைய தத்துவத்தின் மூலம் உண்மையான தத்துவத்தின் நோக்கத்தினை உணர்ந்து கொள்ளும்படி செய்திருக்கின்றார். உண்மையான தத்துவமென்பது அதிகளவு பகுத்தறிவினைப் பெற்றுக்கொள்வதோ, அதிகளவு தர்க்கரீதியான சிந்தனைகளைப் பெற்றுக்கொள்வதோ அல்ல. "உண்மையான தத்துவமென்பது நிலையான உண்மை பற்றிய தெளிவான பார்வையினை வழங்க வேண்டும்" அந்த வகையில், தகுந்த தர்க்கத்துடன் உணர்வு சார்ந்த விடயங்களையும் சரிவிகிதத்தில் கலந்து ஒரு தெளிவான தத்துவத்தினை நமக்கு வழங்கியிருக்கின்றார். தனியே தர்க்கம் மட்டுமல்லாமல் அதனையும் கடந்த உயர்ந்த வாழ்க்கைக்குரிய தத்துவமாக அத்வைத தத்துவம் காணப்படுகின்றது.

## அத்வைத வேதாந்தம் குறிப்பிடும் முக்தி

முக்தி என்பது ஏற்கனவே இருக்கின்ற ஒன்றை உணர்ந்து கொள்ளுதல் ஆகும். இந்த உணர்ந்து கொள்ளலானது நேரடியான உணர்ந்துகொள்ளலாக இருக்காது. முக்தி நிலையானது எமது சாதாரண நோக்கிலிருந்து மறைக்கப்பட்டதாகக் காணப்படும் அதேவேளை வரையறைகள் நீக்கப்படும்பொழுது ஆன்மா முக்தியினைப் பெறுகின்றது என அத்வைத தரிசனம் குறிப்பிடுகின்றது. "எங்கேயும் எப்போதும் இருக்கின்றது, எடுத்துச்செல்ல முடியாதது, மிகவும் உயர்வானது, இதுதான் உண்மையானது, மாறாதது, எல்லா இடத்திலும் உள்ளது, பிரிக்கமுடியாதது, சுய ஒளியுடையது, அதில் நன்மையுமில்லை, தீமையுமில்லை, கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என எதுவுமில்லை. புலனுணர்வு கடந்த ஒன்று." என இராதாகிருஷ்ணன் அத்வைத முக்தி பற்றிக் கூறியுள்ளார். அறியாமை நீங்கி மெய்யறிவு பெறும்போது இந்நிலையினை அடையலாம். இது எதைப்போன்றதெனில், சுட்டால் பொன்சிவப்பது போலவும், அழுக்குகள் நீங்கி நட்சத்திரங்கள் மேகங்களிலிருந்து ஒளி பெறுவது போன்றதாகும். இத்தகைய நிலையானது சிந்தனைக்கு அப்பாற்பட்ட நிலையாகும்.

உலகத்தினை முழுமையாகத் துறந்து கொண்டு அதிலிருந்து பிரிந்து செல்வதாக முக்தியினை உணர்தல் அமைவதில்லை. வெண்ணெயினைத் தீயில் போட்டு உருக்குவதன் மூலம் அதன் கடினத்தன்மையை இல்லாமல் செய்வது போன்றதல்ல. உண்மையினை அறிதல் என்பது பன்மைத்தன்மையினை இல்லாமல் செய்வது அல்ல. மாறாக, பன்மைத்தன்மை பற்றிய உணர்வினை இல்லாமல் செய்வதாகும். உலகம் பற்றி ஏற்கனவே உள்ள நோக்கிற்குப் புறம்பான வகையில் ஓர் உள்ளொளியினைப் பெற்றுக்கொள்வதே முக்தியாகும் (Yandel, 1999).

அத்வைத வேதாந்தத்தில் உண்மைப்பொருளான பிரம்மத்தை அடைவதே ஜீவாத்மாவின் குறிக்கோள் என்று கூறப்படும் அதேவேளை அது மெய்ஞானத்தால் மட்டுமே அடையப்பெறுவது எனவும் கூறப்பட்டுள்ளது. "பிரம்மம் என்பது மனவாக்குக்கு எட்டாதது, மலபந்தமற்றது, நிலையானது, அறிவே உருவானது, இறவாதது, பிறவாதது, நிலையானது, ஆனந்தமயமானது என்றிவ்வண்ணம் பேசலாமேயொழிய அதன் பெருமை பேசமுடியாதது. பிரமத்தாலேதான் நாம் அதனை உணரலாம்." (Yandel, 1999) ஆதலால் ஞாலப்பேருயிர் எனக்கருதப்பட்ட பிரம்மத்தை அடைய முடியுமாதலின் வீட்டுலகத்தை அடையலாம். இக்கருத்து, பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மத்தில் தன்னையும், தன்னில் பிரம்மத்தையும் காண்கின்றான், வேட்கைகளினின்றும் விடுபடுகின்றான், தீமையை வெல்கின்றான், உண்மையான பிராமணன் இவனே என பிருகதாரண்யக உபநிடதத்தில் கூறப்பட்டுள்ளது. இக்கருத்தினை மேலும் தெளிவுபடுத்துவதாகவே, "எப்போது இவனுடைய இருதயத்தில் பொதிந்துள்ள ஆசைகள் எல்லாம் ஒழிகின்றனவோ, அப்போது சாகும் இயல்புடைய மனிதன் சாகாதவனாகின்றான். பிரம்மானந்தத்தை ((முக்தியை) அனுபவிக்கின்றான். (கட உபநிடதம்,6:12) எனும் கருத்து உபநிடதத்தில் காணப்படுகின்றது (Ashuthosananthar 2017).

அழியாப்பொருளாகிய பிரம்மத்தை அழியுந்தன்மையினவாகிய உலகப்பொருள்களால் அறியமுடியாது. ஞானிகள் எல்லையில்லாத சச்சிதானந்தமயமான பிரம்மத்தை அடைய தனக்குள்ளே நாடினர் என்பர். தானே பிரம்மமாகவும், பிரம்மமே தானாகவும் உள்ளதான ஒப்பற்ற நிலையைத் தன் மெய்ஞானத்தினால், தியான அனுபவத்தினால் பெற்றுக்கொண்டான் ஞானி. இந்நிலையானது சொற்பதம் கடந்த ஓர் அனுபூதிநிலை, ஞானானந்த அனுபவநிலை, அதனை உணரமுடியுமேயல்லாது உணர்த்த முடியாது. உப்புக்கட்டியைக் கடலினுள் இட்டபின் கடலினுள் உப்புக்கட்டி எங்குள்ளது என அறிய முடியாததுபோல் ஆத்மாவும்இ பிரம்மாவும் ஒன்றான நிலை, பிறப்பிறப்பில்லாப் பேரின்பநிலை, இது

கட்டுகள் யாவும் கடந்தநிலை, ஜீவாத்மா இறுதி இலட்சியத்தை அடைந்துவிட்டநிலை, பிரம்மத்தோடு ஒன்றான பிரம்மநிலை என அத்வைதம் எடுத்தாள்கிறது (Prabhavananda, 1973).

பேரின்ப நிலையானது உலகத்திலுள்ள ஒவ்வொரு ஜீவனும் அடைதற்குரியது என்கிறது அத்வைதம். கீதை கூறுவது போல இதனை இவ்வுலகிலேயே பெற்றுவிடலாம். ஜீவன் உடலை விட்டுப்பிரியுமுன் அடைந்து கொண்டால் அது ஜீவன் முக்தி எனப்படும். எனவே முக்தி என்பது யதார்த்தத் தன்மையை உணர்ந்தநிலை என்பதாகின்றது. உயிர் தன் இயல்பான நிலையை அறியாமைக்குரிய காரணம் அவித்தை என்ற திரையினால் அது மூடப்பட்டிருத்தலே ஆகும். “எவரது பாவ புண்ணியத்தையும் பரமாத்மா ஏற்பதில்லை. இருப்பினும் தங்களது உண்மை ஞானத்தை மறைக்கும் அஞ்ஞானத்தாலேயே ஆத்மாக்கள் மயங்குகின்றன.” என்கின்றது பகவத்கீதை. நிலத்துக்குள்ளிருக்கும் பொற்குவளையை அறியாதவன் அதன்மேல் உலாவுவது போல பிரம்மத்திலிருந்துகொண்டும் ஆத்மாவானது அவித்தையால் மூடப்பட்டுள்ளதால் தன்னுள்ளிருக்கும் பிரம்மத்தை உணரவில்லை எனக் கூறப்படுகின்றது.

சடங்குகள் மூலமாகவோ, செல்வத்தின் மூலமாகவோ முக்தி கிடைப்பதில்லை. ஆத்மா பிரம்மத்துடன் இணைந்து கொள்வதன் மூலமாகவே முக்தி எய்தப்படுகின்றது. “எவரொருவர் கர்மாவை மோட்சத்திற்குரிய வழியெனக் கருதுகின்றாரோ அவர்கள் இருளில் மூழ்குவதோடு இறப்பை மீண்டும் மீண்டும் சந்தித்துக்கொண்டிருப்பர்” என்கிறது உநிடதம். இவ்வாறான சடங்காசாரத்தைப் பின்பற்றுபவர்கள் மோட்சத்தின் உண்மைத்தன்மையை அறிந்திராதவர்கள். ‘இந்த உலகில் இருக்கும் ஒருவர் இந்த உண்மையை உணராதவரையில் முக்தியென்பதே அவருக்குக்கிடையாது. தொடர்ந்து கர்மாவை மோட்சத்திற்குரியதெனக் கருதுகின்றவர்கள் துயரத்தில் சென்றே முடிவடைவர். எவரொருவர் இதிலிருந்து (கர்மா) விடுபடுகின்றாரோ அவரே பிரம்மத்தை அறிந்தவராக இருப்பார்’ எனவும் ‘அறிவினூடாகவே வாழ்க்கை நிலையாமை உணரப்படுகின்றது. பிரம்மம் உள்ளத்தினால் மட்டுமே அறியப்படவேண்டிய ஒன்றாகின்றது.’ எனவும், ‘எவனொருவன் பிரம்மத்தை அறிகின்றானோ அவன் பிரம்மத்தை எய்துகின்றான். பிரம்மத்தை அறிந்த ஒருவன் அழிவில்லாதவனாகின்றான்.’ எனவும், ‘ஆத்மன் பிரம்மமாகவே கருதப்படுகின்றது. பிரம்மத்தை அறிவதனால் நான் அழிவில்லாதவனாகின்றான்.’ எனவும், ‘எவனொருவன் அதீத பிரம்மத்தை உணர்கின்றானோ அவன் அழிவில்லாதவனாகின்றான்.’ எனவும், ‘அறிவுள்ள ஒன்று பிரம்மம். எல்லா உயிர்களும் இருக்கின்றது என அறிகின்றபோது அவன் அழிவில்லாதவனாகின்றான்.’ எனவும், பிரம்மத்தை அறிந்தவன் இறப்பு, பிறப்பு என்னும் சக்கரத்திலிருந்து விடுபடுகின்றான்.’ எனவும், ‘எவனொருவன் பிரம்மம் ஒன்று என நினைக்கின்றானோ அவனுக்கு ஏனையோர் தெரிவதில்லை.’ எனவும், ‘மெய்யறிவினைப் பெற்றவர், காரிய வர்க்கத்தினைவிட மேலானவரும், மாயையைக்காட்டிலும் வேறுபட்டவருமான திவ்விய புருஷ னை அடைகின்றார். அதுவாக நீ இருக்கின்றாய், நான் பிரம்மமாக இருக்கின்றேன்’ எனவும் அத்வைத தரிசனம் குறிப்பிடும் இறுதி இலக்குப்பற்றிக் கூறப்படுகின்றன (Natesa Sastri, 1932).

தான் அல்லாத மனம், பொறி, புலன்களைத் தானே என உணர்ந்து மருட்கையினால் மனிதன் துன்பமடைகின்றான். இத்துன்பம் நீங்கி முக்திநிலையை அடைய வேண்டுமாயின் மெய்ஞ்ஞானோதயம் உண்டாக வேண்டும். அந்த ஞானோதயம் பெறுவதற்கான பாதையை அத்வைதம் பற்றி விளக்கும் நூல்கள் மூலமாக அறியலாம். சாந்தோக்கிய உபநிடதம், “இறக்கும்போது தன்னை உணர்ந்தவன் இறவாநிலையடைகின்றான், உணராதவன் எவ்வுலகிலுமே இறவாநிலை எய்தமாட்டான்” என்று கூறுகின்றது. உபநிடதத்தை தமது மூலமாகக் கொண்ட கீதையும் மனிதவாழ்வின் இறுதி இலட்சியம் பற்றிக் கொண்ட கருதுகோள் உபநிடத முக்திக்கோட்பாட்டினின்றும் வேறுபட்டதல்ல எனப் பிரபவானந்தர் கூறியிருக்கின்றார்.

உலகத்தினுடைய செயற்பாடுகள் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் சென்றுகொண்டிருக்கும் அதேவேளை, உலகின்மீது விடுதலைபெற்ற மனிதனின் பற்றானது முடிவுக்கு வந்ததாக இருக்கும். விடுதலையினை அடைகின்றபொழுது உலகத்திற்கு எந்த மாற்றமும் ஏற்படாது. உலகு பற்றி எங்களுடைய நோக்கு மட்டுமே மாற்றம் பெறுகின்றது. வலிக்கான காரணம் தவறான அறிவாகும். உண்மை அறிவினால் விடுதலை பெறப்பட்டு வலி இல்லாமல் போகின்றது. இவ்வகையில் விடுதலை என்பது உலகின் அழிவல்ல. மாறாக, உலகுபற்றி நாம் கொண்டிருக்கின்ற தவறான நோக்கின் அழிவாகும். இது அக-புற வேறுபாடு மற்றும், எல்லாவிதமான அனுபவ ரீதியான வகையீடுகள் என்பனவற்றின் முடிவாகும் என அத்வைதவேதாந்தம் எடுத்தாள்கின்றது.

வீடுபேறடைதல் (மோட்சம்) ஆன்மாவின், என்றுமுள்ள தன்மையே. இந்தப் பேருண்மையைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம் அறியாமையே. நாம் செய்ய வேண்டியதெல்லாம் இந்த அறியாமையைக் களைதலே. இதற்குச் சிறந்த வழி அறிவு ஒன்றே. இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் அறிவு அல்லது ஞானம் என்று நாம் குறிப்பிடுவது, சாதாரண மனம் தரக்கூடிய சிந்தனை அறிவன்று. அது உள்ளுணர்வான நேரடியான அனுபவ அறிவையே குறிக்கும். கர்ம யோகத்தாலும் பக்தி யோகத்தாலும் அறிவைப் பெறுவதில் வரக்கூடிய தடைகளை நீக்கி விட்டால் தன்னைப் பற்றி அறிதல் எனும் வழியிலும் வெற்றியோடு தொடர ஆரம்பித்துவிட்டால், இருமையற்ற ஆன்மாவைப் பற்றிய அறிவானது, இருள் விலகச் சூரியன் தோன்றுவதைப் போல நம்மில் உதயமாகிவிடும். அறியாமை அகற்றப்பட்ட அக்கணமே ஞானத்தின் வழியே கூடிய வீடுபேற்றினை

அடையலாம். வீடுபேறு என்பது ஆன்மாவில் என்றும் உள்ள தன்மையாயிருத்தலால், அதனை அடைவதற்கு ஒருவன் சாவானது கொள்ளும் வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒருவனுக்குப் பூரணமான ஞானத்தின் வழியே வீடுபேறு கிடைக்க வேண்டுமாயின் மாயையாகிய அவித்தையை நீக்க வேண்டும். உண்மையான அறிவால் அறியாமையாகிய மாயை அழிந்துவிடும். "இறைவன் நம்முள்ளத்தை தொட்டவுடன், யோகி அளப்பெரிய அறிவாக விளங்கும் பரிபூரணத்தை நோக்கிப் பணிவாகச் செல்லும் போது, பரந்து கிடக்கும் அறியாமையையும், மாயையையும், மயக்கத்தையும் தாண்டுகிறான்." என முக்திக்குரிய வழியாக உண்மை ஞானம் முதன்மைப்படுத்தப்படுகின்றது.

அறியாமையின் விளைவுதான் வினையெனப்படுகிறது. எனவே இவ்வினையினால் எவ்வண்ணம் அறியாமையை அழிக்க முடியும்? ஒரு கயிற்றினைப் பார்த்துப் பாம்பெனக் கூறக் காரணம் இருளாக விளங்கும் அறியாமையே தான். இருள் விலகும் போது உண்மை வெளிப்படுகின்றது. வினைக்குக் காரணம் மனிதனுடைய ஆசையே. ஆசையின் காரணமாகவே மனதின் தூய்மை கெடுகின்றது. "விருப்பத்தின் அல்லது ஆசையின் காரணமாகத்தான் மனத்தின் தூய்மை கெடுகிறது. இந்த ஆசையை அகற்றும் போது அது தூய்மையடைகின்றது. நமது பந்தத்திற்கும் அதுதான் காரணம்இ நமது விடுதலைக்கும் அதுவேதான் காரணம் ஆசையின் காரணமாகத் தான் பந்தம் ஏற்படுகிறது, நிராசை ஏற்படும் போது விடுதலை கிடைக்கிறது. இத்தகைய மனத்தை இடையறாத சாதனையினால் தான் அமைதிப்படுத்த முடியும், அப்போது தான் அது தூய்மையடையும். விறகில்லாத தீ, அணைந்து விடுவது போல ஓட்டமற்ற மனம், ஆசைகளற்று அது பிறந்த இடத்துடன் ஒன்றி மறைந்து விடுகின்றது. வெளிப்பொருள்களையே நாடிக் கொண்டிருக்கும் மனத்தின் ஆற்றலைப் பிரம்மத்தை நோக்கித் திருப்பி, அதனுடன் தொடர்பு கொள்ளச் செய்யும் போது சம்சார (Samsara) பந்தங்கள் மறைந்தொழிகின்றன. தீமைகளினின்றும் அல்லது மாசுகளினின்றும் விடுபட்ட மனம், தூய்மையடைந்து, சமாதி மூலமாக ஒப்பற்ற பேரானந்தத்தைப் பெறுகின்றது." (Mahadevan, 1966) இந்தப் பேரானந்தத்தை அமைதியடைந்த மனத்தால் தான் பெற முடியும். அதை வெறுஞ்சொற்களால் கூறமுடியாது.

அறியாமை நீங்கி எம்மைப் பிடித்துள்ள பந்தங்கள் நீங்க வேண்டுமாயின் சிறந்த குருவை நாடிச் சென்று அவரிடம் இருந்து அறிவுரைகளைப் பெறவேண்டும். குருவானவர் பூரண ஞானம் பெற்றவரா இருக்க வேண்டும். குருவின் அடையாளம் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது. "வேதத்தை நன்கு கற்றுணர்ந்தவரும், பாவமற்றவரும், ஆசைவசப்பட்டு அழியாதவரும், பிரம்ம ஞானிகளில் சிறந்தவரும், பிரம்ம நி ஷ்டையில் ஒடுங்கி நிற்பவரும், விறகில்லாத நெருப்பைப் போல் அமைதியாய் உள்ளவரும், காரணமெதுவுமின்றிக் கடல் போல் கருணை உள்ளவரும், தன்னை வணங்கும் நல்லவர்களுக்கு உறவினரும் எவரோ அவரே சிறந்த குரு." இப்படிப்பட்ட குருவின் போதனைகள் மூலமாகவே அஞ்ஞானம் நீங்கி மெய்ஞானம் கைவரப்பெறும் (Anna, 2008).

குருவின் முக்கியத்துவத்தைப் பின்பற்றிச் செல்பவராகச் சீடன் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற படிகளினூடே சென்று ஞானமே கண்ணாகக்கொண்டு மெய்ப்பொருளை அறியவேண்டும். அறியாமையாகிய அழுக்கை நீக்கப் பல பிறவிகளை மனிதன் எடுக்கின்றான் எனக் கூறப்படுகின்றது. "முன்னேற்றமடைவதற்காய் உண்மையாய்ப் பாடுபடுகின்ற யோகி தன்னுடைய பாவங்களிலிருந்து தூய்மைபெற்று இறுதியில் பற்பல பிறவிகள் பயின்றதன் பின்பு உன்னத இலக்கை அடைகிறான்." எனவே, பல பிறவிகளில் தனது அழுக்குகளைக்கழுவி பக்குவம் பெற்றவன் மோட்சமடைகின்றான் என்றும், அழுக்குகள் கழுவப்படுதல் என்பது எவ்வாறு கைகூடுமெனில், தன்னடக்கம், உடல் உளக்கட்டுப்பாடுகள், திரிகரண இயக்கம், தனிமை, ஆசையறுத்தல், அளவான உறக்கம், உணவு முதலியன பேணப்படுதல் மூலமே என வலியுறுத்தப்படுகின்றது.

முக்திக்குரிய மற்றுமொரு வழியாக தன்னடக்கம் வலியுறுத்தப்படுகின்றது. "உடலைத் தேராகவும், விவேகத்தைச் சாரதியாகவும், மனதைக்கடிவாளமாகவும், ஆத்மாவை தேரில் வீற்றிருப்பவனாகவும், புலன்களைக் குதிரையாக்குகின்றது." இவ்விதம் தன்னடக்கம் பேணிச்செல்லும் பயணியே தனது இலக்கை இறுதியில் அடைவான். தன்னடக்கப் பயிற்சியினால் மனிதனின் அறியாமை நீங்க வழியுண்டு என உபநிடதம் கூறுகின்றது. அறியாமை நீங்கி நல்லறிவு உண்டாகி அவன் தன்னொளியால் பூரணத்துவ நிலையைப் பெற்றுவிடலாம். அறியாமைத்திரையை நீக்குவதற்கு ஆத்ம அடக்கப்பயிற்சி உதவும். இதற்கு ஒழுக்கவிதிகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என அத்வைதம் கூறுகின்றது. ஞானவாளால் அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞானத்தால் உண்மையை உணர்ந்து கொண்டவன் துன்பங்களைக் கடந்து முக்தியடைகிறான்.

முக்தி நிலையில் நன்மை, தீமை புண்ணியம், பாவம் என்பதற்கு இடமில்லை. ஏனெனில் இவற்றில் முரண்பாடான சித்தங்கள் நோக்கங்கள் மற்றும் பண்மைத்துவம் என்பன காணப்படுகின்றன. இவை அனுபவ உலகத்திற்குரியன. முக்தியானது மாறாத அனுபவ உலகிற்கு அப்பாற்பட்ட ஆன்மீக உலகம் சார்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. முக்தி நிலையில் வரையறையற்ற நிலைக்கான ஒருவரின் பசி தீர்க்கப்படுகின்றது. பிரம்மம் பற்றிய அறிவானது அறியாமை அதன் விளைவுகள் (உலகம், காலம், இடம், வரையறை) என்பவற்றை இல்லாமல் செய்துவிடுகின்றது. ஒருவர் முக்தி நிலையில் இருக்கின்ற போது அவரது 'நான்' எனும் உணர்வு இல்லாமல் போய் நிலையான வரையறையற்ற உணர்வு நிலையில் மூழ்கிவிடுகின்றார். அறியாமை மேகங்கள் நீங்கி உண்மைச்

சூரியனாகப் பிரகாசிக்கின்றது. தத்துவமஸி என்பது இந்த நிலையான உண்மையினை விளக்குகின்றது. தத்துவமஸி என்பதன் கருத்து நீயாக உள்ளாய் என்பதாகும். அதாவது, நீயே பிரம்மம் என்பதாகும். இக்கருத்தினைச் சாந்தோக்கிய உபநிடதம் “குழந்தாய்! மேல் நீரைச் சிறிது உண்டு பார். எப்படியிருக்கிறது? ‘உப்பாயிருக்கிறது.’ நடுவிலிருந்து சிறிது உண்டு பார், எப்படியிருக்கிறது? உப்பாயிருக்கிறது ‘அடியிலிருந்து சிறிது உண்டு பார். எப்படியிருக்கிறது? ‘உப்பாயிருக்கிறது’ ‘அதைக் கொட்டிவிட்டு என்னிடம் வா’ என்றார். அவன் அங்ஙனமே செய்தான். அப்போதும் இப்போதும் அது இருக்கவே இருக்கிறது. ‘இங்கே ஸத்தான வஸ்துவை நீ காணவில்லையெனினும் இங்கே இருக்கவே இருக்கிறது அணுமாத்திரமான அந்த சூட்சும வஸ்து எதுவோ.... அதுவே நீயாக உள்ளாய் (தத்துவமஸி).” எனக் கூறுகின்றது. இக்கருத்தானது பிரம்மம் வேறு ஆத்மா வேறு எனும் கருத்தினை உதறித் தள்ளிவிட்டு ஆத்மாவே பிரம்மம் என்றும், இதனை உணர்தலே முக்தி என்பதனையும் தெளிவுபடுத்தகிறது.

முக்திநிலையானது எல்லாவற்றையும் பிரம்மமாகக் காண்பதாகும். எல்லாவற்றையும் ஆத்மாவாகக் காண்பதாகும். இதில் எல்லாப் பன்மைத்துவங்களும் இல்லாமல் போகின்றன. இந்த உலகம் முழுமையான ஆத்மாவாக உணரப்படுகின்றது. ஆத்ம ஞானம் என்பது ஏனைய அறிவினைப் போல் அகஇ புற செயல்முறையினைக் கொண்டதல்ல. ஒரு தடவை ஆத்மாவை உணர்ந்து விட்டால், திரும்பத் திரும்ப அந்த அனுபவம் தேவைப்படாது. ஏனெனில் ஆத்ம ஞானம் என்பது சாதாரண அறிவுச் செயன்முறையிலிருந்து வேறுபட்ட வகையில் அறியப்படுகின்றது. சூரியனுக்குத் தன்னைக் காண்பதற்கு விளக்குத் தேவைப்படாது. சங்கரர் முக்தி நிலை பற்றி ஒரு கதை கூறுகின்றார். “ஒரு இளவரசன் காட்டிலுள்ள வேட்டைக்காரர்களால் கடத்தப்பட்டு வதைக்கப்படுகின்றான். அந்த இளவரசன் தன்னுடைய உண்மையான அடையாளத்தினை (இளவரசன்) மறந்து ஒரு வேட்டைக்காரனாகத் தனது வாழ்க்கையினை நடாத்துகின்றான். நன்கு வளர்ந்தவுடன் அவனுக்குள் இனம்புரியாத உணர்வு இருப்பதினை உணர்கின்றான். அது முற்றிலும் வேட்டைக்கார சூழ் நிலையிலிருந்து வேறுபட்டது. அப்போது அரசவையிலிந்து ஒருவர் வந்து அவனைப்பற்றிக் கூறியதும் அவன் தனது வேட்டைக்கார வாழ்வினைத் துறந்து அவனது உண்மை அடையாளத்தினை உணர்கின்றான்” நிலையினால் ஏற்படுகின்றது (Mahadevan, 1966).

மேலும், உள்ளம் அமைதிபெற்று, அச்சத்தை அடக்கி, பிரம்மச்சரிய விரதம் காத்து மனதை அடக்கிப் பிரம்மத்தைக் குறியாகக் கொண்டு தியானம் செய்யவேண்டும் என்கிறது. யாண்டும் மனதைத் தியானத்தில் நிறுத்தி உள்ளத்தை அடக்கிய யோகி என்னிடத்துள்ள முக்தியிலே முற்றுப்பெறுகிற சாந்தியடைகிறான் எனக் கீதை கூறுகின்றது. ஆதலால், முக்திக்குரிய தியானமும் அத்வைத தரிசனத்தில் முக்கிய இடம்பிடித்துள்ளது என்பது புலனாகின்றது.

அத்வைத வேதாந்தம் முக்தியின் வகைகளை இரு வகைகளாக வகைப்படுத்தியுள்ளன. அவையாவன,

1. ஜீவன் முக்தி (வாழும்போதே முக்தியடைதல்) Jivan Mukthi (Liberation of Life time)
2. விதேஹமுக்தி (இறப்பின்போது அடைவது) Videha Mukthi (Liberation after Death)

## ஜீவன் முக்தி (Jivan Mukthi)

உயிருடன் வாழும்போது கிடைக்கும் முக்தியே ஜீவன் முக்தியாகும். ஜீவன் முக்தி பற்றிய விடயங்களை ஞானிகள், முனிவர்களின் வாழ்வினை வைத்துக் கண்டு பிடித்துவிடலாம். விடுதலை பெற்ற மனிதன் ஞானியாகவும், கடந்தநிலைதனைக் கொண்டவனாகவும் காணப்படுகின்றான். அத்வைத முக்தியென்பது கால வரையறையற்ற மெய்மையினை உணர்வதாகும். ஜீவன் முக்தர்கள் இந்நிலையினை உணர்ந்தபோதிலும் மனமும், உடலும் இருப்பதன் காரணமாகத் தூய பிரம்மத்தினை உணரும் நேரங்களைத்தவிர மற்ற நேரங்களில் வரையறையுடைய உலகுடன் தொடர்பினைக் கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது (Krishna Warrier, 1961).

பிருகதாரண்ய உபநிடதத்தில் முக்தியடைந்தவர் நிலை “பிராமணன் அடைந்த பாண்டித்தியத்தை வெறுத்து ஒன்றுமறியாத பாலனைப்போல் ஞான பலத்துடன் மட்டும் நிற்கிறான். பின் பாண்டித்தியத்தையும், ஞானபலத்தையும் விட்டு மனனத்தில் ஆழ்ந்து முனியாகின்றான். பின்னர் மௌனமின்மையை நினைத்து பிரம்மஞானியாகின்றான். அந்தப்பிரம்மஞானி எவ்வாறிருப்பானெனின், எந்த ஆசாரமுடையவனாக இருப்பினும் இங்கு கூறியபடி பிரம்ம ஞானியாகவேதான் விளங்குவான். இந்நிலையைக் காட்டிலும் வேறானதெல்லாம் அழிவுடையதே” எனக்கூறப்பட்டுள்ளது. இந்த உபநிடத வாசகங்களுக்குச் சங்கரர் விளக்கம் கொடுக்கும்போது, Panditya, Balya and Mauna எனக்குறிப்பிடுகின்றார். இவைகள் பிரம்மனை நோக்கிய புரிதலை அதிகரித்தனவாக உள்ளன. எவ்வாறாயினும் இந்த உபநிடதம் ஜீவன் முக்தர் என்பவர் வாழுகின்ற உடலுடன் இந்த உலகத்தின் முழுமையை அடைந்தவராகக் குறிப்பிடுகின்றது. பொதுவாக, அத்வைதம் கூறும் ஜீவன் முக்திநிலை என்பது “ஆத்மாவில் இன்பம் துய்த்து, ஆத்மாவில் கிரீடித்து, ஆத்மாவில் உள்ளொளி காணும் யோகியாகத் தன்னிலே பிரம்மத்தைக் காண்கின்றான்.” எனப் பகவத்கீதை கூறுகின்றது. இத்தகைய பிரம்ம நிலையினை அடைந்தவர்களை

மக்களும் விரும்புவர். அவரும் மக்களை விரும்புவார். சுதந்திரமாக விருப்பு வெறுப்பின்றி எல்லோரையும் நேசிப்பார். ஜீவாத்மா பிரம்மத்தினை அடைதல் ஒரு சிறந்த பேறு எனக் கூறப்படுகின்றது. ஆத்மாதான் பிரம்மம் என ஒருதடவை ஆத்மாவை உணர்ந்தால் எல்லாவற்றையும் உணர்ந்ததற்குச் சமனாகக் கருதப்படுகின்றது.

## விதேஹ முக்தி (Vitheha Mukthi)

பழவினைகள் நீங்கி விடுதலை பெற்றவர் உடலை இழந்ததன் பின் எந்தவொரு அசைவும் சாத்தியமில்லை என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பிருகதாரண்ய உபநிடதத்தில், பாம்பு தனது உடலை உரித்து விடுவது போலஇ விடுதலை பெற்றவரும் தனது உடலை விட்டுவிடுகிறார். அதன் பின் அவரது உடலுக்கும்இ ஆத்மாவுக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை. ஏனெனில் ஆத்மா எங்கும் நிறைந்த பிரம்மமாக உணரப்படுகின்றது. உடலை நீங்குதலும், முக்தியடைதலும் ஒரே நேரத்தில் நடக்கின்றன. இந்நிலையைப் பெற்றவரே விதேஹன் முக்தர் எனக் கூறப்பட்டுள்ளது.

முண்டக உபநிடதத்தில், “பிரமத்தை அறிகின்ற ஆத்மா பிரம்மத்துடனேயே ஒன்றித்துவிடும்” என்றும், பிரம்மசூத்திர சங்கர பாஷ்யத்தில், “மரணத்தின் பின் பிரம்மலோகத்தை அடைகிறான்” என்றும், கைவல்ய நவநீதத்தில், “தத்துவ ஞானமாகிய அக்கினியால் அவித்தையாகிய காரணதேகம் வெந்து நீறாகிவிடும். கனமான தூலதேகமும் அதற்கு நியமித்த காலத்தில் சவமாய் வீழாநிற்கும். அப்பொழுது உரிமையாகிய சூட்சும தேகமானது கொல்லலுலையிற் (காய்ந்த) இரும்புண்ட நீர்போல துரியமாயும், பூரணமாயும் நிற்கின்ற சொரூபத்தின் கண்ணே இறந்து போகும்,” எனவும் விதேஹ முக்தி பற்றி அத்வைத வேதாந்தத்துடன் தொடர்புபட்ட நூல்கள் குறிப்பிடுகின்றன.

## முடிவுரை

பொதுவாக அத்வைத வேதாந்தம் குறிப்பிடும் முக்தி என்பது மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்து அல்லலபடும் நிலைகளிலிருந்து சுதந்திரம் பெறும் நிலையேயாகும். இந்த முக்திநிலையானது இருவகைகளில் கூறப்படுகின்றது. ஒன்று ஜீவன் முக்தி அதாவது மனிதன் உடலில் உயிரிருக்கும் போதே அடையும் முக்தி இதுவாகும். விதேஹமுக்தி என்பது உடலை விடுத்த பின் அடையும் நிலையாகும். ஜீவன் முக்தர் உடலோடு இருப்பதனால் இன்னும் அவருக்குத் தன் ஆன்மாவும், பரமனும் இரண்டாகத் தெரியும் நிலையிலிருப்பார். ஆனால் அது உண்மை அல்ல என்பதையும் அவர் நன்கறிவார். உண்மையான, இறுதி நிலை ஒன்றான நிலை என்பதை அவர் நன்கறிந்திருப்பதால் மனக்கலக்கங்கள் இல்லை என்றாலும் அவர் பரமனின் நிலையான நிலையை அறிந்திருந்தாலும், தன் உடலைத் துறக்கும் வரையிலும் அவர் பரமனாகவே மாறுதல் நிகழாது. பிராரப்த கருமங்கள் ஒழிந்த பின்னர், உடலும் அழிந்ததன் பின்னா கிடைக்கும் நிலையே விதேஹ முக்தி நிலையாகும்.

## References


Anna (2008) Vivekachudamani, Sri Ramakrishna Math, Chennai, India.

Ashuthosananthar (2017) Katha Upanishad, Sri Ramakrishna Math, Chennai, India.

Mahadevan, T.M.P. (1966) Attuvita tattuvam, Tamil Veliyetu Kalagam, Chennai, India

Natesa Sastri, (1932) Brahmasuthra Sankara Bahsyam, Vol 1, Aryamatha Samvarthini Achagam, Chennai, India

Prabhavananda, s(1973) Vedic Religion and Philosophy, Sri Ramakrishna Math, Chennai, India.

Radhakirishnan, S. (1940) Indian Philosophy, Vol-2, George Allen & Unwin Ltd, Ruskan House, London.

Ragul Sangiruthiyaayan, (1985) Hindu Thaththuva Iyal, New century Book house, Chennai, India

Yandell, K.E. (1999). Philosophy of Religion: A Contemporary Introduction, Routledge, New York.



## Funding

No funding was received for conducting this study.


## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License.

**Cite this Article**

R. Sahayaseelan, Final Goal in Advaita Vethanda is a Philosophical Research, Indian Journal of Tamil, 5(1), (2024) 12-18. https://doi.org/10.54392/ijot2412